ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1758/26 - 2012 මැයි 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.05.17

*1758/26 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்*

*22 அ பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 22அ பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இதனகத்து அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள இடப்பரப்பை இச்சட்டத்தின் தேவைக்காக, அபிவிருத்தி செய்யப்படவேண்டிய கனரகத் தொழில்களுக்கான ஒரு விசேட வலையமொன்றாகுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு,*
*2012, ஏப்பிறல் 30.*

**அட்டவணை**

*கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவு, கோட்டியார் பற்று சிறு பிரிவில் சம்பூர் கிழக்கு, பிரிவு இலக்கம் 222சீ, கடற்கரைச்சேனை கிராம அலுவலர் பிரிவில் சம்புக்காளி, சம்பூர் மற்றும் கடற்கரைச்சேனை கிராமங்களில் அமைந்துள்ள காணிகளின் நில அளவையாளர் நாயகத்தின் சார்பாக திருகோணமலை அரச காணி அளவையாளர் கே. வீ. கிருஷ்ணராஜா தயாரித்த 2012, மாச்சு 19 ஆந் திகதியிடப்பட்ட பிரதேசவியல் ஆரம்ப வரைபட இலக்கம் 41 இல் துண்டு இல. 1386, 1393 மற்றும் 1397 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டுகள் முழுவதும் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டுகள் இல. 1386, 1393 மற்றும் 1397 என்பன பின்வரும் எல்லைகளையுடையவை:*

*காணித்துண்டு இல. 1386 :*

*வடக்கில் : வீதி (பிரதேச சபை) (காணித்துண்டு 362) காணித்துண்டுகள் 1257, 517, 1259, 1261, 1263 வீதி (பிரதேச சபை) (காணித்துண்டுகள் 1275, 1364, 209, 227 2/2, 1368, 1370 மற்றும் 1365) :*

*கிழக்கில் : காணித்துண்டுகள் 1387 மற்றும் 1388;*

*தெற்கில் : காணித்துண்டுகள் 1388, 1389 மற்றும் 1394 ;*

*மேற்கில் : காணித்துண்டுகள் 1394, வீதி (பிரதேச சபை) (காணித்துண்டு 362)*

*எனும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஐந்நூற்று எட்டு ஏக்கர்கள், ஒரு றூட், இருபத்துநான்கு தசம் எட்டு ஆறு பேர்ச்சுகள் (508ஏ. 01றூ. 24.86 பே.) அல்லது இருநூற்று ஐந்து தசம் ஏழு நான்கு நான்கு மூன்று ஹெக்டேயர்கள் (205.7443 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.*

காணித்துண்டு இல. 1393 :

வடக்கில் : வீதி (பிரதேச சபை) (காணித்துண்டு 362) காணித்துண்டு 1394 ;

கிழக்கில் : காணித்துண்டுகள் 1394, 1392 மற்றும் 1391 ;

தெற்கில் : காணித்துண்டு 1391 மற்றும் ;

மேற்கில் : காணித்துண்டு 1391 மற்றும் வீதி (பிரதேச சபை) (காணித்துண்டுகள் 561 மற்றும் 362)

எனும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள நூற்று எழுபத்தைந்து ஏக்கர்கள், ஒரு றூட், இருபத்து நான்கு தசம் ஒன்று ஒன்பது பேர்ச்சுகள் (175ஏ. 01றூ. 24.19 பே.) அல்லது எழுபது தசம் ஒன்பது எட்டு இரண்டு நான்கு ஹெக்டேயர்கள் (70.9824 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

காணித்துண்டு இல. 1397 :

வடக்கில் : காணித்துண்டுகள் 1396 மற்றும் 1395 ;

கிழக்கில் : காணித்துண்டு 1395 மற்றும் வீதி (பிரதேச சபை) (காணித்துண்டுகள் 362 மற்றும் 561) ;

தெற்கில் : வீதி (பிரதேச சபை) (காணித்துண்டு 561) மற்றும் காணித்துண்டு 1398 மற்றும்

மேற்கில் : காணித்துண்டு 1398 மற்றும் கடலுடனான ஒதுக்கம் (காணித்துண்டுகள் 1367 மற்றும் 1167)

எனும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள நூற்று முப்பத்து நான்கு ஏக்கர்கள், மூன்று றூட்டுக்கள், இருபத்து ஆறு தசம் மூன்று மூன்று பேர்ச்சுகள் (134ஏ. 03றூ. 26.33 பே.) அல்லது ஐம்பத்து நான்கு தசம் ஐந்து ஒன்பது எட்டு சைபர் ஹெக்டேயர்கள் (54.5980 ஹெக்) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

முழுவதுமாக எண்ணூற்று பதினெட்டு ஏக்கர்கள், இரண்டு றூட்டுக்கள், முப்பத்தைந்து தசம் மூன்று எட்டு பேர்ச்சுகள் (818ஏ. 02றூ. 35.38 பே.) அல்லது முந்நூற்று முப்பத்தொன்று தசம் மூன்று இரண்டு நான்கு ஏழு ஹெக்டேயர்கள் (331.3247 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

06- 139

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.